**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 4/2023**
**நாள்.13.08.2026**
**வா.சா.1- சண்முகம்**
**த/பெ - முனியப்ப நாடார்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. தாவா சொத்தின் சர்வே எண்.384 ஆகும். அதன் உட்பிரிவுகள் தெரியாது என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தாவா சொத்தில் உள்ள கிணற்றில் 3 பங்கு எனக்கும், ஒரு பங்கு பிரதிவாதிகளுக்கும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. மேற்படி கிணற்றுக்கான பாகத்தை எனது பங்காளிகளான பெரியசாமி, பழனியப்பன் ஆகியோரிடமிருந்து ஒரு பங்கும், எனக்கு பூர்வீகமாக ஒரு பங்கும், பிரதிவாதி வகையறாவை சேர்ந்த குழந்தைவேல், கோபால் ஆகியோரிடமிருந்து ஒரு பங்கும் கிரையம் பெற்றேன்.

3. வா.சா.ஆ.1 ன் படி தாவா கிணற்றில் 4 ல் ஒரு பங்கு கிரையம் பெற்றுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பெரியசாமியிடமிருந்து வாங்கிய சொத்தை பொறுத்து 1/4 பாகம் தான் கிரையம் பெற்றுள்ளேன்.

4. வா.சா.ஆ.2 ன் படி அதே கிணற்றில் 1/12 பாகம் தான் சின்னய்யா என்ற கோபால் நாடார் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.3 ன்படி குழந்தைவேலிடமிருந்து நான் கிரையம் பெற்ற சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1/3 பாகம் கிரையம் பெற்றேன். வா.சா.ஆ.3 ன்படி சர்வே எண்.384/3A ல் 1 ஏக்கர் 18 செண்டிலும், சர்வே எண்.385/2 ல் 74 செண்டிலும் இருக்கின்ற கிணற்றடி செண்ட் 16 ல் பொதுவில் 1/12 பாகம் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.3 ன் படி கிணற்றடி மட்டும் தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.4 ன்படி கிணற்றில் 1/12 பாகம் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

8. ஆகமொத்தம் வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்களின் படி கிணற்றில் மொத்தம் 6/12 பாகம் தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

9. தாவா கிணற்றடி செண்ட் 16ல் வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்களின்படி செண்ட் 6 1/4 அளவுள்ள கிணற்றடியை மட்டுமே கிரையம் பெற்று மேற்படி ஆவணங்களை காட்டி சர்வே எண்.384/3Aல் உள்ள 1 ஏக்கர் 16 செண்டிற்கும் மோசடியான முறையில் பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

10. சர்வே எண்.384/3A ல் உள்ள 1 ஏக்கர் 16 செண்ட் உள்ள சொத்தானது 1ம் பிரதிவாதி நாகராஜனுக்கு தான் ஆதியில் இருந்தே பாத்தியம் என்றால் சரிதான், அவர்தான் அனுபவித்து வருகிறார், ஆனால் அவ்வளவு இடம் இருக்காது. அதற்கு 21.10.1985ம் தேதியில் பட்டாஎண்.476ன் படி சர்வே எண்.373ல் 1 ஏக்கர் 57 செண்டும், சர்வே எண்.381ல் 58 செண்டும், சர்வே எண்.384/3A ல் 1 ஏக்கர் 16 செண்டிற்கும் 1ம் பிரதிவாதி பெயரில் நில உடமை பதிவு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தனி வட்டாட்சியரால் 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் பட்டா வழங்கப்பட்டது தெரியாது, ஆனால் சர்வேயருக்கு படி கட்டி இடத்தை அளந்துபார்த்தால் தெரியும்.

11. சர்வே எண்.384/3Aல் உள்ள 1 ஏக்கர் 16 செண்ட் நிலத்தை 1ம் பிரதிவாதி கடந்த 40 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அதில் உள்ள 16 செண்டில் உள்ள கிணறு முழுவதும் ஆதியில் இருந்தே 1ம் பிரதிவாதிக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

12. மேற்படி கிணற்றில் 1ம் பிரதிவாதி சர்வேஎண்.384/3Aக்கு கட்டுப்பட்ட நிலத்தில் உள்ள கிணற்றில் சரிபாகத்தை அதை சுற்றியுள்ள விவசாயிகள் கேட்டுக்கொண்தற்கு இணங்க நல்லெண்ணத்தின் அடிப்படையில் வாய்க்கரலாக பாதி பாகம் அனுபவிக்க விட்டுக்கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் அருகில் விவசாயிகள் இல்லை.

13. 1ம் பிரதிவாதி நாகராஜனுக்கு கிணற்றடியில் 6/12 பங்கும், பெரியசாமி என்பவருக்கு 3/12 பங்கும், ஆறுமுகம் என்வருக்கு 1/12 பங்கும், சின்னய்யா என்ற கோபால் நாடார் வகையறாவிற்கு 1/12 பங்கும், குழந்தைவேல் நாடார் என்வருக்கு 1/12

பங்கும் ஒதுக்கப்பட்டு பொதுவில் வைத்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல, 1ம் பிரதிவாதிக்கு 1/4 பங்கு உள்ளது.

14. 16 செண்ட் கிணற்றடி நிலத்தில் 6 1/4 செண்ட் நிலத்தை மட்டும் கிரையம் பெற்றுக்கொண்டு, மொத்த சொத்திற்கும் பட்டா பெற்றுக்கொண்டது தவறு என்றால் சரியல்ல.

15. 25 வருடத்திற்கு முன்பே 1ம் பிரதிவாதி நாகராஜன் வகையறாவிடமிருந்து கிரையம் கேட்டேன் என்றால் மனோகர் மூலமாக மேற்படி சொத்தை கிரையம் பெற கேட்டார்கள் நான் மறுத்துவிட்டேன். 1ம் பிரதிவாதியிடம் நான் கிரையம் கேட்டதற்கு அவர் மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதன்பின்பும் அந்த சொத்தை கிரையம் பெற பல வழிகளில் நான் முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல.

16. இதற்கு பின்பும் கடந்த 27.10.2020ம் தேதி என்னுடைய உறவினர்களை அழைத்துக்கொண்டு 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அத்துமீறி நுழைந்தது தாவா சொத்திற்கு தங்கள் பெயரில் தான் பட்டா உள்ளது என்று கூறி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தேன் என்றால் சரியல்ல, அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை.

17. மேற்படி சொத்தை ஆக்கிரமிக்க நான் முயற்சி மேற்கொண்ட பிறகு தான் பட்டா மாறியுள்ள விவரம் எரியோடு கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து விசாரித்த வகையில் தெரிய வந்தது என்றால் மாற்றிக்கொடுக்க நான் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை, 1ம் பிரதிவாதி தரப்பில் சொல்லி தான் தெரியவந்தது. ஆனால் நான் நம்பவில்லை.

18. மேற்படி எனது பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யகோரி பழனி வருவாய் கோட்டாட்சியரிடம் 1ம் பிரதிவாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

19. மேற்படி மனு ந.க.எண்.4087/2021/அ7 மற்றும் 5379/2021/அ7 என நம்பராகி விசாரணையை வேடசந்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் எங்கிருந்து வந்தது என்று தெரியாது, தாசில்தார் அலுவலகத்தில் இருந்து விசாரணைக்கு வர அழைப்பாணை வந்தது.

20. வேடசந்தூர் வட்டாட்சியர் அலுவலக ந.க.எண்.7309/2022/ஆ2 என நம்பராகி விசாரணைக்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி விசாரணைக்கு பிரதிவாதிகள் மட்டும் ஆஜராகி வந்தார்கள்

என்றால் சரிதான். தொடர்ந்து 3 முறை வாய்தா போடப்பட்டும் நான் ஆஜராகாமல் எவ்வித வழக்குமூலமும் இல்லாமல் பொய்யான வழக்கு காரணங்களை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டு இவ்வழக்கை காரணம் காட்டியே வேடசந்தூர் வட்டாட்சியர் அவர்களின் விசாரணயை நிறுத்தி வைத்துவிட்டேன் என்றால் விசாரணையின் போது எனக்கு பாதகமாகும் என்று நான் கருதியதால் நீதிமன்றத்தின் மூலம் தீர்வை காண்கிறேன் என்று விசாரணைக்கு ஆஜராகவில்லை.

21. மேற்படி சொத்தில் 1ம் பிரதிவாதி தரப்பினர் கடந்த 30.05.2023ம் தேதி இடைஞ்சல் செய்ததாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக கூறப்பட்டுள்ள சங்கதி என்றால் சரியல்ல.

22. நான் எனது பெயரில் பெற்றுள்ள பட்டா செல்லாது என்றால் சரியல்ல.

23. சர்வே எண்.384/3A க்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்குவதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் நீதிமன்றம் மூலம் என்ன உத்தரவு வழங்கப்படுகிறதோ அதற்கு நான் கட்டுப்படுகிறேன்.

24. 1ம் பிரதிவாதி அனுபவிக்கும் தாவா சொத்திற்கு நான் பட்டா பெற்றுள்ளது சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. வழக்குரையில் கூறப்பட்டுள்ள சொத்துவிவரம் தவறானது என்றால் சரியல்ல.

25. சர்வே எண்.384/3A ல் உள்ள சொத்திற்கு 1ம் பிரதிவாதி அனுபவிப்பதை நான் தடை செய்வது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**